iSprout

Inspiring Workspaces

# அலுவலகங்கள் செயல்பட இட வசதி வழங்கும் ‘ஐஸ்பிரவுட்’ பெருங்குடியில் வணிக மையம் துவக்கம்

சென்னை, பிப்.2–

சென்னை போன்ற மாநகரங்களில் அலுவலக பணியிடங்களுக்கான தேவை அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு, பணியிட வணிக மையங்களை அமைப்பதில் முன்னணி நிறுவனமாகிய ஐஸ்பிரவுட் நிறுவனம், ஓஎம்ஆர், பெருங்குடியில் உள்ள சரவணா மேட்ரிக்ஸ் டவரில் 5வது மற்றும் 6வது மாடியில் தங்களுடைய 6வது பணியிட வணிக மையத்தை துவங்கி உள்ளது.

இவ்வணிக மையத்தில் சுமார் 60, ஆயிரம் சதுர அடி பரப்பளவில் வெவ்வேறு நிறுவனங்களின் 1100 பணியாளர்கள் பணிபுரியலாம் என்று ஐஸ்பிரவுட் வணிக மையம் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தரி பதிபாண்ட்லா தெரிவித்தார்.

உங்கள் வணிக யோசனைகளை நிறுவனங்களாக மாற்ற உதவ எங்கள் தொழில் வல்லுநர்களின் குழு இங்கே உள்ளது. தவிர, பணியிடங்களை வழங்குவதன் மூலம், ஐஸ்ப்ரவுட் அதன் வாடிக்கையாளர்களுக்கு தேவைகளின் அடிப்படையில் வணிக



அமைப்பு மற்றும் நிர்வாகத்திற்கு உதவுகிறது. ஐஸ்பிரவுட் நிறுவனம் இந்தியா முழுவதும் பணியிட அமைப்புகளை வழங்கும் நோக்குடன், ஹைதராபாத், விஜயவாடா மற்றும் சென்னைக்கு பிறகு, பெங்களூர், புனே, நொய்டா மற்றும் குர்கானில் எங்களுடைய பணியிட வணிக மையங்களை அமைக்கவுள்ளோம் என்று கூறினார்.

வாடிக்கையாளர்களுக்கு ஐஸ்பிரவுட் வணிக மைய பணியிட நன்மைகள் மற்றும் அதன் முழு அளவிலான சேவைகள் குறித்து அவர் கூறுகையில், நிறுவன ஒருங்கிணைப்பு, கணக்கியல், ஊதியம், பதிவுகள், ஜிஎஸ்டி தாக்கல், டிடிஎஸ் தாக்கல், வரி மற்றும் தணிக்கை போன்ற வணிக ஆதரவு சேவைகளை திறம்பட வழங்குகிறது என்று எடுத்துக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், நாட்டில் பல்வேறு வகையான நிறுவனங்களின் அதிகரிப்பாலும், தகவல் தொழில் நுட்பம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு சார்ந்த துறைகளின் வளர்ச்சியாலும் இத்தகைய பணியிடங்களின் வளர்ச்சி வரும் காலங்களில் நமது மதிப்பீடுகளுக்கும் அதிகமாக இருக்கும் என்று கூறினார்.

ஐஸ்பிரவுட் நிறுவனத்தின் பங்குதாரரான பனிதர் படூரி, பணியிட வணிக மையத்தை துடிப்பான வண்ணங்களுடனும், கருத்தாக்கம் நிறைந்த சுவரோவியங்களுடனும், பணியாளர்களுக்கு ஊக்கம் தரும் மேற்கோள் கருத்துகளுடனும் சிறந்த முறையில் வடிவமைத்துள்ளார்.

MAKKAL KURAL | DATE 02-FEB-2020